[1993 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 105, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

105—

பாலமலையில் மலைவாழ் மக்களுக்காக அரசு மருத்துவமனை ஏற்படுத்தல்.

*9066—திருமதி செ.சுந்தராம்பாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம் பாலமலையில் மலைவாழ் மக்களுக்காக அரசு மருத்துவமனை ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் பாலமலை என்ற இடத்தில் மலைவாழ் மக்களுக்காக அரசு மருத்துவமனை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் பகுதி கொளத்தூர் ஒன்றியம், பாலமலையில் 5,000க்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கொளத்தூருக்கோ அல்லது 30 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மேட்டூருக்கோ செல்ல வேண்டும். அவர்கள் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு மலையிலிருந்து கீழே இறங்கி வருவதற்குச் சாலை வசதியோ, பேருந்து வசதியோ கிடையாது. எனவே, தமிழகத்தின் ஏழை எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், காவல் தெய்வமாகவும் விளங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் பாலமலையில் மலைவாழ் மக்களுக்கு ஒரு அரசு மருத்துமனையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய கொள்கைபடி 30,000 ஜனத் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நிலையை வைத்திருக்கிறது. கொளத்தூர் ஒன்றியத்திலே 65,900 பேர்

ஜனத் தொகை என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அதன்படி இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அங்கே இருக்கின்றன. ஒன்று கொளத்தூரிலும், இன்னொன்று சத்தியா நகரிலேயும் இருக்கின்றன. எனவே, இதற்குத் தனியாக ஆரம்பிக்கின்ற சாத்தியக்கூறு இல்லை. இருந்தாலும் அந்த மலையிலிருந்து மக்கள் நடந்து வர வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைப் பற்றி இங்கே தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அங்கே கூட தனியாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பது என்பது கடுமையான காரியம் என்றே கருதுகிறேன். எனவே, தனியாக வேறு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்யலாம். ஆனால் உத்தரவாதமாகச் சொல்ல முடியாது.

திருமதி. செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஒரு நடமாடும் மருத்துவமனையாவது அமைக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் மருத்துவமனையும் அங்கே போவதற்கு வழியில்லை என்று அவர்களே சொன்னார்கள். ரோடு இல்லை என்று சொன்னார்கள். எனவே, வாகனங்கள் அங்கே போவதற்கு வாய்ப்பு இருக்காது என்று கருதுகிறேன். எனவே, அதைப்பற்றித்தான் தனியாக ஆய்வு செய்யலாம் என்று சொன்னேன். சட்டமன்றத்திலே சொல்லுகின்ற காரணத்தினால் ஆய்வு செய்யலாம் என்று சொன்னாலே உத்தரவாதம் என்று எடுத்துக்கொள்வார்கள் என்ற காரணத்தினால் தான் அதற்கு உத்தரவாதம் இல்லை, ஆய்வு செய்து அதற்குப் பின்னாலே முடிவு சொல்கிறேன் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன், கேள்வி மேட்டூர் தொகுதி பற்றியது.

டாக்டர் வெ. புருஷோத்தமன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த மலைவாழ் பகுதிக்கு எந்தவித வசதியும் இல்லாத பகுதிக்கு மக்கள் தொகை அடிப்படையில் மருத்துவ வசதி கிடைக்காத சூழ்நிலையில் அங்கு குறைந்த பட்சம் ஒரு சப்-சென்ட்டரையாவது அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா அல்லது மருத்துவ முகாம்கள் ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது மருத்துவ டீம் மலைவாழ் மக்களுக்குச் சென்று வர அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு சப்-சென்டர் இருக்கிறது. மலைப் பகுதியாக இருந்தால் 3 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு சப்-சென்டர் வீதம் இப்போது வைத்து நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால், கேம்ப் நடத்துவதைப் பற்றி ஏற்கெனவே நம் புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்தின் கீழ் கேம்ப்களை நடத்தி இருக்கிறோம். ஆனால், மாதா மாதம் அங்கே நடத்த முடியுமா என்று தெரியவில்லை. எனவே, இப்படி ஒதுக்குப்புறமாக இருக்கிற இடத்திற்கு மரச்சினை இல்லாமல் என்ன வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்று கருதி, அதுபற்றி தனியாக ஆய்வு செய்து, அதுபோன்ற இடங்களில் என்ன வசதிகளை கொடுக்க முடியும் என்பதைப்பற்றி தனியாக முடிவு எடுக்கலாம் என்பதைப் பற்றி ஏற்கெனவே நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின் நலன் கருதி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதை ஆய்வு செய்யலாம் என்று. தற்போது அரசு வழங்கியுள்ள சிறப்பு தாய் சேய் நல சிறப்பு முகாம்கள் நடத்த இருப்பதால் இப்படிப்பட்ட சிறப்பு முகாம்களை மேட்டூர் தொகுதியில் பாலமலையில் அரசு முன்னுரிமை கொடுத்து நடத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட தலைமை ஏற்று நடத்தினால் அரசாங்கம் மகிழ்ச்சி அடையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு ம. சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

106—

கரூர்-சேலம் அகல இரயில் பாதை அமைக்கும் பணி.

(*11210— திரு. ம. சின்னசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-சேலம் அகல இரயில் பாதை அமைக்கும் பணியை துரிதப்படுத்த அரசு மைய அரசினை கோரியுள்ளதா?